உதயன்

# மக்டொனால்ட் கல்லூரி மண்டபத்தை நிறைத்த "கலாதீபம் - 99"








வட இலங்கையில் சிறந்த கல்வி நிறுவனங்களில் ஒன்றான வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் கடந்த 9ம் திகதி சனிக்கிழமை மலை ஸ்காபுறோ சேர் ஜோன் மக்டொனால்ட் உயர் கல்லூரி மண்டபத்தில் நடத்திய கலாதீபம் -99 மண்டபத்தை நிறைத்த சிறந்ததொரு விழாவாக அமைந்தது என்று கூறலாம்.

வேலணை மத்திய மகா வித்தியாலய மாணவரின் கன்னி முயற்சியாக இந்த கலாதீபம் -99 அமைந்திருந்தாலும் பல வருடங்கள் விழாக்களை நடத்திய அனுபவசாலிகளினால் நடத்தப்பட்ட விழாவாக கலாதீபம் -99 அமைந்தது குறிப்பிடத்தக்கது.

மிகக் குறுகிய ஒரு காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விழாவை மண்டபம் நிறைந்த விழாவாகவும் அமைந்தது எனலாம். இது பழைய மாணவர்களின் முயற்சிக்கு வெற்றியுள்ள நிகழ்ச்சி என பலர் மண்டபத்தில் பேசிக் கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நிகழ்ச்சிகள் சில மண்டபத்தில் இருந்த மக்களுக்கு சலிப்பு ஊட்டினாலும் பல நிகழ்ச்சிகள் சிரிக்கவும்,சிந்திக்கவும், கேட்கவும் கூடியதாக அமைந்தது எனலாம். இவற்றுள் வெள்ளைக் கடற்கரையினிலே என்ற நாடகம் அனைவரையும் தமிழ் ஈழத்தை சிந்திக்க வைக்கக்கூடியதாக அமைந்தது. அத்துடன் ஆதிரை சிவபாலனின் இன்னிசை நிகழ்ச்சியும் அனைவரையும் கவர்ந்தது. இவ் இன்னிசை நிகழ்ச்சியில் பக்கவார்த்தியம் இசைத்தவர்களில் வெள்ளை இனத்தை சேர்ந்தவரும் அமர்ந்து தபேலா வாத்தியத்தை இசைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சபையை அலங்கரித்த பார்வையாளர்கள் அனைவரும் விழா முடிவில் பூரண திருப்தியோடு சென்றது இங்கு குறிப்பிடத்தக்கது. இங்கே காணப்படும் படங்களில் சில விழாவில் எடுக்கப்பட்டவையாகும்.

**எஸ்.ஜே.சோதி**